# TN Lok Sabha Election Results 2024: தேர்தல் ஜனநாயகத்தை காத்திட கோரி மதுரையில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்!

தேர்தல் ஜனநாயகத்தை காத்திட கோரி மக்கள் இயக்கங்கள் சார்பில் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

By : அருண் சின்னதுரை | Updated at : 03 Jun 2024 10:36 PM (IST)




Election Results 2024: நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் மொத்தம் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது. 543 தொகுதிகளிலும் பதிவான வாக்குகள், நாளை எண்னபட்டு முடிவுகள் வெளியிடப்பட உள்ளன. இந்நிலையில் வாக்கு எண்ணிக்கையை நேர்மறையாக நடத்தி தேர்தல் ஜனநாயகத்தை காத்திட கோரி மக்கள் இயக்கங்கள் சார்பில், மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் 100-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றனர்.

## மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்

இந்நிலையில் வாக்கு எண்ணிக்கையை நேர்மறையாக நடத்தி தேர்தல் ஜனநாயகத்தை காத்திட கோரி, மக்கள் இயக்கங்கள் சார்பில் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றனர். ”நாடாளுமன்ற தேர்தலில் நேர்மையான வாக்கு எண்ணிக்கையை வலியுறுத்தியும், தேர்தல் ஜனநாயகத்தை காத்திட வலியுறுத்தியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தகுதி நீக்கம் செய்ய கோரியும், அரசியல் சட்டத்தைக் காக்க வேண்டும்”. உள்ளிட்ட, கோரிக்கைகளை வலியுறுத்தினர். இதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தினர். அப்போது தேர்தல் ஆணையத்திற்கு எதிராகவும், மத்திய பா.ஜ.க., அரசு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதில் மக்கள் கண்காணிப்பாக இயக்குநர் ஹென்றி திபேன், வழக்கறிஞர் வாஞ்சிநாதன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்களும் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டனர்.

https://tamil.abplive.com/news/madurai/madurai-lok-sabha-election-results-2024-candlelight-demonstration-was-held-in-madurai-demanding-to-wait-for-election-democracy-186713